ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/23 - 2021 සැප්තැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.09.17

*2245/23 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

64(5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் பெயர்குறித்து, அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட **திரு. அஜித் நிவாட் கப்ரால்** அவர்கள் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக, பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதென, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தம் செய்யப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்,

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அந்த அரசியற் கட்சியின் செயலாளர் மேற்குறித்த பிரிவின் கீழ் தகவுடைய அக்கட்சியின் அங்கத்தவர் ஒருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென **திரு. கெட்டகொட கமகே ஜயந்த பெரேரா** என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கமைய செயற்பட்டு, மேற்குறித்த **திரு. அஜித் நிவாட் கப்ரால்** கேட்டு விலகியுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக **திரு. கெட்டகொட கமகே ஜயந்த பெரேரா** பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ்.பி. திவாரத்ன,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எம்.எம். மொஹமட்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

கே.பீ.பீ. பத்திரண,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

ஜீவன் தியாகராஜா,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2021, செத்தெம்பர் 17.*

*10-08*

1A - G 34966 — 405 (2021/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*